REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5 | சென்னை: ஆடி 5௳ சனி (20—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 6௳ ஞாயிறு (21—7—57) [இதழ் 30

520 குமாஸ்தாக்கள் பெறும் சம்பளத்தை 11 அதிகாரிகள் பெறுகின்றனராம்!

புதுடில்லி, ஜூலை 20—

"இரயில்வே நிர்வாகத்தில் உள்ள 11 உயர்தர அதிகாரிகள் ஆண்டொன்றுக்கு ரூ. 4,68,000 சம்பளமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்தத் தொகை சுமார் 520 குமாஸ்தாக்கள் பெறக்கூடிய சம்பளத்திற்குச் சமமாகும்; எனவே, இந்த அதிகாரிகள் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள முன்வர வேண்டும்"

என்று, மக்கள் சபையில் ஒரு உறுப்பினர், இரயில்வே மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசியிருக்கிறார்.

போராடத் துணிந்துவிட்ட ஊழியர்கள் மீது பண்டிதர் பாய்ச்சல்!

'அச்சுறுத்தலுக்குப் பணியமாட்டோம்; வேலைநிறுத்தத்தைச் சந்திப்போம்!'

உபதேசிக்கும் பண்டிதர் பிடிவாதம் பேசுகிறார்!

வேலை நிறுத்தத்தில் ஈடுபட உத்தேசித்துள்ள மத்திய சர்க்கார் ஊழியர்கள்மீது பண்டிதர் பாய்ந்திருக்கிறார்! ஊழியர்களின் கோரிக்கைகளில் பிரதானமான 'இரண்டாம் சம்பளக் கமிஷன் வேண்டும்' என்ற கோரிக்கையை ஒட்டி, அப்படி ஒரு கமிஷன் அமைக்க வேண்டும் என்ற தனி நபர் மசோதாவின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் பண்டிதர் குறிக்கிட்டு ஊழியர்களை மிரட்டும் வகையில் பேசியிருக்கிறார்!

"அச்சுறுத்தல், மீறுதல், வேலைகளைத் தாமதப்படுத்துதல் போன்ற ஊழியர்களின் பாஷையை எந்த ஒரு சர்க்காரும் சகித்துக்கொள்ள முடியாது; சர்க்காரையும் சமூகத்தையும் அச்சுறுத்தித் தங்கள் கோரிக்கைகளுக்கு இணங்க வைக்க முடியாது"

என்று அவர் குறிப்பிட்டாராம்!

"இப்போதுள்ள அடிப்படைப் பிரச்சினை எல்லாம் உற்பத்தியைப் பெருக்குவதுதான்; ஏனெனில், அப்போதுதான் ஒரு பொருளாதாரப் புரட்சியை நடத்த முடியும்—மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும்; எனவே, நாடு, இந்தக் காரியத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"சம்பள நிர்ணயம் பற்றி விசாரணை நடத்துவதில் எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை; ஆனால், அந்த விசாரணையின்போது நாட்டின் பொருளாதார நிலை, திட்டத்தின் தேவைகள் இவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்றும் பண்டிதர் வாதாடினாராம்!

"வேலையைத் தாமதப்படுத்துவது என்ற முறையை சில பிரிவுத் தொழிலாளர்கள் மேற்கொள்ளுவது கண்டிக்கத்தக்கதாகும். அண்மையில், துறைமுகத் தொழிலாளர்கள், உணவுப் பொருள்களை ஏற்றுவது, இறக்குவது ஆகிய வேலைகளைத் தாமதப்படுத்தியதினால், அவை தேவையான பகுதிகளுக்குக் குறிப்பிட்ட காலத்தில் செல்லவில்லை என்பது மட்டுமல்ல; இந்தத் தாமதத்திற்கு நஷ்டஈடாக அன்னியக் கப்பல் கம்பெனிகளுக்கு தினம் ரூ. 1 லட்சம்வரையில் நாம் தரவேண்டி ஏற்பட்டது. இது போன்ற நஷ்டங்களை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை."

என்றும் பண்டிதர் மக்கள் சபையில் பேசியிருக்கிறார்.

தபால், தந்தி இலாகா ஊழியர்களின் வேலை நிறுத்த அறிவிப்பைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது:—

"இந்த அச்சுறுத்தலுக்கு நாங்கள் பணிந்துவிடமாட்டோம்; அவர்கள் பிடிவாதம் காட்டினால் நாங்கள் வேலைநிறுத்தத்தைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்."

நெய்வேலிப் பகுதி முந்திரித் தோட்ட அழிவு

நஷ்டஈடு தர அமைச்சர் சம்மதம்

சென்னை, ஜூலை 20—

நேற்றைய தினம் நடைபெற்ற விவசாய மானிய வெட்டுப் பிரேரணை மீது பேசிய தோழர் மு. கருணாநிதி அவர்கள்,

"நெய்வேலிப் பகுதியில் நல்ல காரியத்துக்காக முந்திரிக் காடுகள் அழிக்கப்பட்டபோதிலும், அப்படி அழிப்பதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு தரப்படுமேயானால் அவர்கள் வேறிடங்களில் முந்திரிச் சாகுபடியைத் தொடர்ந்து நடத்த இயலும்" என்று, சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதில் அளித்த மந்திரி, அந்த யோசனையை வரவேற்பதாகக் கூறி, நஷ்டஈடு தருவதற்கு ஆவன செய்வதாகக் குறிப்பிட்டார்.

கழனிகள் களங்களாக மாறுவதைத் தடுப்பீர்!

குமரிக் கடலில் முத்தெடுப்பீர்—விவசாயக் கல்லூரி வளர்ப்பீர்!

சென்னை சட்டசபையில் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, ஜூலை 20—

நேற்று சட்டசபையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள், விவசாய மானியக் கோரிக்கை வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டவை இங்கு தரப்படுகிறது:—

"விவசாயத்தை நம்பியும், விவசாயத்தால் பெருமை பெற்றும் திகழ்கின்ற நமது நாட்டில், விவசாயத்திற்கு மிகமிக முக்கியமானது நல்ல விதைதான். அத்தகைய நல்ல விதைகளை வளர்த்துத் தருகிற பொறுப்பை மாநில அரசு ஏற்றிருக்கிறது என்று கனம் நிதி அமைச்சர் தந்த அறிக்கையிலும், நேற்றைய தினம் விரிவுரை ஆற்றிய விவசாய அமைச்சருடைய பேச்சிலும் காணப்படுகின்றது. நல்ல விதைகளைத் தருவதற்காக 400 விதைப் பண்ணைகளை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவப்படும் என சென்னை அரசாங்கத்தினுடைய செய்தித் துறை வெளியீடான 'உழவனுக்கு' என்ற நூலில் காணப்படுகிறது. அதே நேரத்தில் 400 விதைப் பண்ணைகளை நிச்சயமாக நிறுவுவார்கள் என்று மகிழ்ச்சி பெற்றாலும், நிதி அமைச்சருடைய நிதி நிலை அறிக்கையிலும், விவசாய அமைச்சருடைய பேச்சிலும் பார்த்தால் 360 பண்ணைகள்தான் நிறுவப்படும் என்ற செய்தி தெரியவருகிறது. 400 பண்ணைகள் நிறுவப்படும் என்ற செய்தியையும் 360 பண்ணைகள் நிறுவப்படும் என்ற செய்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 40 பண்ணைகள் குறைந்து போனதாகத் தெரியவருகிறது......

[அமைச்சர் எம். பக்தவத்சலம்:—

'தென் கன்னடம், மலையாளம் முதலிய பிரதேசங்கள் சேர்ந்து இருந்த காலத்தில் 'ப்ளானிங் கமிஷனால்' நிறுவப்படுவதாக உத்தேசிக்கப்பட்டிருந்தது; அவைகள் இப்போது பிரிந்து போய்விட்டபடியால், அவை 360-க்குக் குறைந்து போய்விட்டது என்பதை மட்டும் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.']

"...'உழவனுக்கு', என்கின்ற அரசினர் நூலில் வந்த செய்தியையும், புள்ளி விபரங்களையும் வைத்துக் கொண்டுதான் நான் சொன்னேன்; பரவாயில்லை. இந்த 360 விதைப் பண்ணைகளை வைத்துக் கொண்டு நல்ல விதைகளைக் கொடுக்க முடியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அது எந்த அளவில் விவசாயிகளுக்குச் சேரப்போகிறது; எந்த அளவில் அவர்கள் அனுகூலம் அடையப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

"விவசாயிகளும், மற்றும் தொழிலாளர்களும், இந்த மானியத்தில் உள்ளடங்கி இருக்கும் மீனவர்களும் எந்த அளவில் பலனடையப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை.

"பனிக்கட்டியானது ஒருவருடைய கையிலிருந்து பத்து பேருடைய கைக்கு மாறும்போது, கடைசியில் போய்ச் சேருபவர் கையில் ஒன்றும் இல்லாமல் போய்விடும். அந்த அளவில்தான் இந்த விதைகளையும், கடனையும், விவசாயக் கருவிகளையும் விநியோகம் செய்யும் முறை ஆகிவிடுகின்றது. இடையே உள்ளவர்கள் அந்த அளவுக்கு அவைகளைப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.

முந்திரித் தொழில்

"விவசாயக் கல்லூரி ஒன்று கோவையில் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1956—57-ல் மட்டும் இந்தக் கல்லூரிக்கு ரூ. 7 இலட்சம் செலவிடப்படும் என்று அரசாங்கச் செய்தித்துறை வெளியிட்டுள்ள 'உழவனுக்கு' என்ற நூலில் 24-ம் பக்கத்தில் பார்த்தேன். ரூ. 7 இலட்சம் அதற்கென்று செலவிடப்படுவதாக இருந்தால், உள்ளபடியே அதைக்கண்டு எல்லோரும் மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான்.

"இந்த ஆண்டில், கனம் நிதி அமைச்சர் அவர்கள், விவசாயக்

(4-ம் பக்கம் பார்க்க)

நங்கவரம் விவசாயிகள் அல்லல்!

மு. கருணாநிதி அறிவிப்புக்கு அமைச்சர் பதில்

அமைச்சர் பக்தவத்சலம்:—"குளித்தலைப் பகுதியில் விவசாயிகள், நிலப் பிரபுக்கள் தகராறு குறித்து கனம் அங்கத்தினர் மு. கருணாநிதி அவர்கள் பேசினார்கள். அதைக் கேட்டு உண்மையிலேயே நான் உண்மையிலேயே நான் ஏமாற்றம் அடைந்தேன். ஏனெனில், அவரே நிலப் பிரபுக்களிடம் நிலைமையை விளக்கி ஒரு சமரசம் காணுவார் என எதிர்பார்த்தேன்."

மு. கருணாநிதி:—"அதில் நானும் ஏமாற்றமே அடைந்தேன்."

அமைச்சர்:—"அவர் கூறியது போல நிலப் பிரபுக்களிடமும் விவசாயிகளிடமும் நல்லுறவு இல்லையேல் விவசாய வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன். இந்த நிலைக்குப் பரிகாரம் தேட அவரே மீண்டும் இன்னும் அதிக முயற்சி எடுத்துக் கொண்டு ஏதேனும் சமரசம் செய்துவைக்க முழு முயற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டும்."

70 வயதைத் தாண்டிய வயோதிகருக்கு உபகாரச் சம்பளம்!

உத்தர பிரதேச சர்க்கார் உத்தேசம்

இலட்சுமணபுரி, ஜூலை 19—

எழுபது வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களுக்கு உபகாரச் சம்பளம் (பென்ஷன்) தருவது என்று, உ. பி. மாநில சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்!

இந்தத் திட்டத்தின் விவரங்கள் இப்போதுதான் சேகரிக்கப் படுகிறதாம்; இது அமுலாகுமானால், உ. பி. மாநில சர்க்கார்தான், இதுபோல வயோதிகருக்குப் பாதுகாப்புத்தரும் திட்டம் ஒன்றினை முதலில் கொண்டுவரும் மாநிலமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

உ. பி.-யின் வரவு-செலவு

உ. பி. மாநிலத்தின் 1957-58ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி வரவு ரூ. 96·66 கோடி என்றும், செலவு ரூ. 108·33 கோடி என்றும், எனவே, பற்றுக்குறை ரூ. 11·67 என்றும் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—7—57 சனி

விந்தை மனிதரின் வம்புப் பேச்சு!

[1]

"தமிழ் நாடு தனியாக இருக்க வேண்டுமென்றால் இந்தியை நிச்சயமாகப் புறக்கணித்து விடலாம். ஆனால் இந்தியா ஒன்றாக இருக்கும்வரை இந்தியா முழுவதற்கும் பொதுவான ஒரு தேசிய மொழி அவசியம். இந்தியாவின் எல்லா மாநிலங்களும் இந்தியைப் படிக்க வேண்டும். இந்தி நமது தேசிய மொழி; எனவே, எல்லோரும் இந்தியைப் படிப்பது அவசியம்.

"இந்தியைப் புறக்கணித்தால் தமிழ்நாடு பின்தங்கிவிடும்; மத்திய சர்க்கார் உத்தியோகங்களுக்கு இந்தி தெரிவது அவசியமென்று கருதப்பட்டால், தமிழ் நாட்டினருக்கு வேலை கிடைக்காமல் போய்விடும். தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதாகப் பின்னர் புகார் சொல்வதில் பயனில்லை.

"பொதுவாகத் தமிழ் நாடும், குறிப்பாகப் பிற்பட்ட வகுப்பினரும் பின்தங்கி இருக்கக் கூடாது என்றால், இந்தி எதிர்ப்பாளர்கள், இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நிறுத்தி விட வேண்டும்.

"பிற்பட்ட வகுப்பினரின் நலன்களில் இந்தி எதிர்ப்பாளர்கள் உண்மையில் அக்கறை கொண்டிருப்பதானால், இந்தி எதிர்ப்புக் கூச்சலை அவர்கள் நிறுத்திவிட வேண்டும்.

"இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதை உறுப்பினர்கள் தீர்மானித்துக் கொள்ளலாம்.

"மத்திய சர்க்காரில் உத்தியோகங்கள் வேண்டாமென்றால், இந்தி படிக்க வேண்டாம்.

"ஆனால், 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்கள் தமிழ்நாட்டின் பெரிய எதிரிகள்' என்று மட்டும் நான் உறுதியாகக் கூறுவேன். இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் அவர்கள் பிடிவாதமாக இருந்தால், தமிழர்களுக்கு அவர்கள் ஈடுசெய்ய முடியாத நஷ்டத்தை விளைவித்தவர்களாவார்கள்.

இவ்வாறு சட்டமன்றத்தில், நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், இந்தி மொழியின் தேவை குறித்து காலட்சேபம் செய்திருக்கின்றார்.

இந்தி மொழி கற்றால்தான் மத்திய அரசாங்கத்தின் உத்தியோகங்கள் கிடைக்குமாம். எனவே, இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள தமிழ் நாட்டு மக்கள் முன்வரவேண்டும் என்கிறார் நிதி அமைச்சர்.

மத்திய அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவதற்காக இந்தி மொழியைப் பயிலுங்கள் எனப் பொதுப்படையாகத் தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்ளவதுடன் நிதி அமைச்சர் இருந்துவிடவில்லை. அவ்வுத்தியோகங்களுக்குப் பல்லிளித்துக் கிடக்கின்றவர்கள் பெரும்பாலும் பின்தள்ளப்பட்ட வகுப்பினர்தான் என முடிவு கட்டிக் கொண்டவராக நிதி அமைச்சர் அப்பிரிவு மக்களுக்குக் குறிப்பான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு இந்தி கற்க வேண்டியதின் இன்றியமையாமை குறித்தும், கற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற தமிழ் மக்கள் பிரிவு குறித்தும் நிதி அமைச்சர் கூறினதுடன் நின்றிருப்பாரானால், அவருடைய முறையீடு பற்றி நாம் துளியும் கவலை கொண்டிருக்க மாட்டோம். ஆனால் அவரோ மத்திய அரசாங்க உத்தியோகத்திற்காக இந்தி மொழியைக் கற்கக் குறிப்பாக நம்மில் பின்தங்கிக் கிடப்பதாகக் கொள்ளப்படும் தமிழ் மக்களைக் கூவி அழைப்பதுடன், மூல இந்தி எதிர்ப்பாளர்களான நமது முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக, அவர்களை ஏவிவிடவும் முயன்றுள்ளார்.

மத்திய அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதற்கான பெரும் விருப்பத்தை நம்மில் பின்தள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும் மக்கள்மீது ஏற்றி, எதிர்காலத்தில் அதைப் பெறவிடாது அவர்களைத் தடுக்க வேண்டும் என்ற நினைப்புடன் இன்று முதலே செய்து வருகின்றவர்கள் இந்தி எதிர்ப்பாளர்கள்தான் எனப் பழிச் சுமத்தி, மூல இந்தி எதிர்ப்பாளர்களான நமது கழகத்துக்கும், அப்பகுதி மக்களுக்கும் பெரும் பகையை மூட்டிவிட நிதி அமைச்சர் முயன்று இருக்கின்றார்.

நிதி அமைச்சரின் இச்சிறு செயலை விளக்கமாகக் கூற வேண்டுமானால், இந்தி எதிர்ப்பாளர்களாகிய நமது சொல்லுக்குக் கட்டுப்பட்டு இந்தி கற்காது பின்தள்ளப்பட்டிருக்கும் மக்கள் இருந்துவிடுவார்களேயானால், சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி மொழி கற்றில்லாத காரணத்தினால் மத்திய அரசாங்க உத்தியோகத்தைப் பெற முடியாது அவர்கள் ஏங்கிக்கிடக்கவேண்டி நேரிடும்; அவ்வாறு உத்தியோகம் பெறாது திண்டாடி தெருவில் நிற்க வேண்டும் என்ற உள்ள நோக்கத்துடன்தான் இந்தி மொழியை கழகத்தவர் இன்று எதிர்த்து வருகின்றனர்; எனவே பிற்பட்ட மக்கள் இந்தி எதிர்ப்பாளர்களான கழகத்தவர்களுக்கு ஆதரவு தரக் கூடாது; அவர்கள் பின்தள்ளப்பட்ட மக்களின் பரம விரோதிகள்; அவர்களை விரட்ட வேண்டும்; என்ற விளைவை எதிர்பார்த்தவராக நிதி அமைச்சர், பின்தள்ளப்பட்டுள்ள மக்களுக்கும் மத்திய அரசாங்க உத்தியோகத்திற்கும் முடிச்சுப் போட்டு பேசி இருக்கின்றார்.

நம்மில் பின்தள்ளப்பட்ட மக்களாக இருந்து வருகிறவர்கள் பல இலட்சக்கணக்கில் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும், நாள் ஒன்றுக்கு அரைவயிறு உணவாவது உண்ணுவதற்கான தொழில் வசதியைச் செய்துதர இந்த நிதி அமைச்சரால் இயலவில்லையானாலும், அதற்கான ஆசையோ ஆற்றலோ தமக்கிருப்பதாக இதுவரை செயலளவில் காட்டிக்கொள்ள இந்த நிதி அமைச்சரால் முடியவில்லையானாலும், பின்தள்ளப்பட்டுக் கிடக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கு இந்தி மொழியைக் கற்றுக் கொடுத்து, மத்திய அரசாங்க உத்தியோகத்தை இனி சொல்ளளவில் வாங்கித் தருவதாக சொல்லவாவது முன்வந்தாரே இந்த நிதி அமைச்சர் பெருந்தகை, அதுவே பின்தள்ளப்பட்ட மக்கள் இன்றே மத்திய அரசாங்க பணி பெற்ற மாதிரிதான்! அதற்காக நிதியமைச்சருக்கு, சிலைநாட்ட முன்வர வேண்டும் பின்தள்ளப்பட்ட மக்கள்!

இன்று இந்தி கற்காததின் விளைவாக மத்திய அரசாங்கத்தின் உத்தியோகத்தை எதிர்காலத்தில் பின்தள்ளப்பட்ட மக்கள் இழந்துவிடப் போகின்றனர் என்ற தமது கற்பனையை மெய்ப்பிக்க, அதற்கான துளியும் தொடர்பற்ற ஒரு பழைய சம்பவத்தையும் சுட்டிக்காட்டுகிறார் நிதி அமைச்சர். அதாவது, 'ஆங்கிலம் கொண்டுவரப்பட்டபோது நம்மில் பலர் அதைப் புறக்கணித்தோம். மற்றவர்கள் படித்து முன்னேறியபோது அவர்கள் புகார் சொல்ல ஆரம்பித்தனர். ஆங்கிலத்தின் விஷயத்தில் நடந்ததுபோல் இந்தி விஷயத்திலும் நடந்துவிடக் கூடாது' என்று நிதி அமைச்சர் குறிப்பிடுகிறார்.

இதற்கும், இன்று இந்தி கற்க தவறுவதற்கும் தொடர்பு இருந்தாலும் இருக்கலாம்—இல்லாமலும் இருக்கலாம். அது பற்றிய கவலை நமக்குத் தேவையே இல்லை.

ஆனால்,

'நம்மில் பலர்'

'மற்றவர்கள்'

'அவர்கள்'

என நிதி அமைச்சர், யார் யாரைக் குறிப்பிடுகின்றார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில் எவருக்கும் விருப்பம் இருக்கும். அவ்விருப்பத்தை நிறைவேற்றி வைக்க வேண்டியதும், அவ்வாறு கூறிய நிதி அமைச்சரின் கடமையாகும்.

ஆனால், நிதி அமைச்சரோ

நம்மில் பலர்

மற்றவர்கள்

அவர்கள்

என மூடுமந்திரமாக, தமக்குத் தெளிவாகத் தெரிந்துள்ளதை, வெளிப்படையாகக் கூறாது இருந்துவிட்டார். அதை வெளிப்படையாகக் கூற துணிவில்லையோ என்னவோ நிதி அமைச்சருக்கு!

மத்திய அரசாங்கஉத்தியோகம் பெற இந்தி கற்க வேண்டும் என்ற நிதி அமைச்சர் கூற்றின் அடிப்படை உண்மையை நாளை ஆராய்வோம்.

தஞ்சையில் ஒரு மருத்துவக் கல்லூரி

துவங்குவதற்கு தீவிர முயற்சிகள் நடைபெறுகின்றனவாம்

சென்னை, ஜூலை 18—

"தஞ்சையில் ஒரு மருத்துவக் கல்லூரி துவங்க தீவிரமான முயற்சிகள் நடைபெறுகின்றன; மாவட்டக் கழகம், இரயில்வேயிடமிருந்து பெறும் ரூ. 1·75 கோடியில் கொஞ்சம் தொகையை இதற்காக ஒதுக்கலாம்; இதுபோன்று நிதி நிலைமை சாதகமாகிவிட்டால் சீக்கிரமே தஞ்சையில் கல்லூரி துவங்கப்பட்டுவிடும்"

என்று மந்திரி மாணிக்கவேலர் சட்ட சபையில் அறிவித்திருக்கிறார்.

பர்மிய யூனியனிலிருந்து பிரிந்து செல்ல ஷான் ராஜ்யம் நடத்தும் கிளர்ச்சி

பிரதமர் யூ-நூ நிலையை விளக்குகிறார்

'பர்மா சுதந்திரம் பெற்ற 1948-ம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு விரும்பினால், யூனியனிலிருந்து பிரிந்து செல்லலாம்' என்ற நிபந்தனையைத் தந்து, பர்மாவுடன் ஷான் ராஜ்யத்தை இணைத்தனர், சுதந்திரம் பெற்றதும்; இந்தப் பிரிந்து போகும் உரிமையை, அரசியல் சட்டத்திலும் வழங்கினர்.

இந்த உரிமையை அடிப்படையாகக் கொண்டு, 'பர்மாவிலிருந்து பிரிந்துசெல்ல வேண்டும்' என்ற கிளர்ச்சி, ஷான்ராஜ்யத்தில் கடந்த சில ஆண்டுகளாக இடைவிடாது நடைபெற்றபோதும், நமக்கு அதுபற்றிய செய்திகள் தொடர்ச்சியாகக் கிடைக்கவில்லை.

இப்போது பர்மியப் பிரதமரான யூ-நூ அவர்களே இக்கிளர்ச்சி பற்றிப் பத்திரிகையாளரிடம் பேசியிருக்கிறார் என்று செய்தி தரப்பட்டுள்ளது.

யூ-நூ, ஷான் ராஜ்யத்தின் 'தலைவர்'கள் ஈடுபட்டுள்ள இந்தப் 'பிரிவினைக் கிளர்ச்சி' பற்றி பத்திரிகையாளரிடம் பேசும்போது பர்மிய சர்க்காரின் உதவிப் பிரதமரும், ஷான் ராஜ்யக் கவுன்சிலின் தலைவருமான சாவோ ஷிய்யா என்பாரும் உடன் இருந்திருக்கிறார்

'ஷான்ராஜ்யப் பகுதியின் தலைவர்'கள் 'சாவ்ப்வாஸ்' என்று அழைக்கப்படுகின்றனர்; அவர்கள், இந்தப் பிரிவினைக் கிளர்ச்சியை சட்ட ரீதியான வழிகளில் நடத்துகிறார்களா, அல்லது தங்கள் இலட்சிய ஈடேற்றத்திற்காக இராணுவத்திற்கு எதிராக வெறுப்பைத் தூண்டி இனவிரோதமூட்டி வருகிறார்களா?" என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டிருக்கிறார்.

பதிலளித்த யூ-நூ குறிப்பிட்டதாவது:—

"சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சர்க்கார் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்காது; நிலைமைக்குத் தக்கவாறு நாம் கண்டிப்பாக நடந்துகொள்வோம்; ஆனால், நமது நாடு இளமைப் பருவத்தில் இருக்கிறது; நமக்கு என்ன செய்யவேண்டும் என்று தெரியும்; நாம் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிற அவசியத்திற்கு அவர்கள் நம்மை ஆளாக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'ஷான் ராஜ்யங்கள் அனைத்தும் ஒரே ராஜ்யமாக இணைக்கப்பட்ட காலத்தில், பல ராஜ்யங்களின் 'சாவ்ப்வாஸ்'க்களும், தங்களின் பாரம்பரை உரிமைகளை சர்க்கார் தரும் நஷ்ட ஈடுகளைப் பெற்றுக்கொண்டு விட்டுவிட வேண்டும் என்று ஒப்பந்தமாயிற்று."

"இந்த ஒப்பந்தத்தை யாராவது மீறுகிறார்களா?" என்று கேட்கப்பட்டபோது, உதவிப் பிரதமர், 'இல்லை' என்று மறுத்திருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடு!

சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, ஜூலை 19—

குடும்பக் கட்டுப்பாட்டின்கீழ், ஆண்களின் விந்துக் குழாயில் ஒரு சிறு அறுவை சிகிச்சை செய்வதன் மூலம் நிச்சயமான பலன் கிடைக்கிறதாம்!

போதிய ஆதரவு உள்ள இம்முறைக்கு, மருத்துவமனைகளில் செய்யப்பட்டுள்ள வசதிகள் போதுமானதாக இல்லையென்று கருதப்படுகிறது; எனவே, இச்சிகிச்சையில் போதிய பயிற்சியுள்ள தனிப்பட்ட டாக்டர்களின் சேவையைப் பெறுவதற்கு அரசாங்கம் நிச்சயித்துள்ளது. மாதம் ரூ. 200-க்குக் குறைந்த சம்பளம் பெறுகிறவர்களுக்குச் செய்யப்படும் அறுவை சிகிச்சைக்கு, தலா ரூ. 25 பண உதவி கொடுக்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது; இத்திட்டம் ஓர் ஆண்டு அமுலிலிருக்கும். இதற்காக ரூ. 25,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

நாரத்தம் புல் தைலம்

அமெரிக்காவுக்கு அனுப்பும் அளவு அதிகரித்திருக்கிறதாம்!

புதுடில்லி, ஜூலை 19—

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு நாரத்தம் புல் தைலத்தின் ஏற்றுமதி அதிகரித்திருக்கிறதாம்!

'இத்தைலத்தின் ஏற்றுமதி மதிப்பு 1952—53-ல் சுமார் ரூ. 9 91 852-ஆக இருந்தது; 1955-56-ல் சுமார் ரூ. 46 25,770 ஆக அதிகரித்தது; 1956—57 முதல் 11 மாத காலத்தில் இது மேலும் அதிகரித்து ரூ. 51 இலட்சமாக அதிகரித்தது என்று மக்கள்சபையில் மத்திய வர்த்தக அமைச்சர் நித்தியானந்த கனுங்கோ அறிவித்தார்.

நிஜாம் பெறும் நஷ்டஈடு

ரூ. 21·43 இலட்சம் தர ஆந்திர சர்க்கார் முடிவு

ஐதராபாத், ஜூலை 18—

ஐதராபாத் நிஜாமுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களை எடுத்துக் கொண்டதற்காக அவருக்கு ஆந்திரப் பிரதேச சர்க்கார் ரூ. 21·43 இலட்சம் நஷ்டஈடாகத் தந்திருக்கின்றனராம்!

சர்க்கார் அந்த நிலங்களுக்கு ரூ 50 இலட்சம் தருவதாகக் கூறியிருந்தது என்றும், ஆனால், நிஜாமே ரூ. 25 இலட்சமாகக் குறைத்துக்கொண்டார் என்றும், உஸ்மானிய செலாவணிப்படி ரூ. 25 இலட்சம்தான் இந்திய நாணயப்படி ரூ 21·43 இலட்சமாகிறது என்றும் ஆந்திர சட்டசபையில் காளா வெங்கட்ராவ் தெரிவித்திருக்கிறார்.

தரப்படுகிற நஷ்டஈட்டில் ஆந்திரமும், மைசூரும், அவர்கள் எடுத்துக் கொண்ட நிலங்களுக்காக பங்கு தருவது என்ற விவகாரம் பரிசீலனையிலிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் கைதிகள் தேர்வு

சென்னை, ஜூலை 19—

தமிழ்நாட்டில், மூன்று மத்திய சிறைகளிலுள்ள 17 கைதிகள் 1957 ஏப்ரலில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறியுள்ளனராம்.

1957 ஏப்ரல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுத, கோயமுத்தூர் மத்திய சிறையிலுள்ள 9 கைதிகளுக்கும், மதுரை சிறையிலுள்ள 4 கைதிகளுக்கும், வேலூர் சிறையிலுள்ள 9 கைதிகளுக்கும் 1956 அக்டோபரில் அரசாங்கம் அனுமதியளித்தது; அவர்களில் முறையே 7, 2, 8 பேர்கள் பரீட்சையில் தேறியிருக்கின்றனர்.

ரூ. 3 கோடி நஷ்டம்!

புதுடில்லி, ஜூலை 17—

"போக்குவரத்தின்போது இரயில்வேக்களில் கெட்டுப்போய் விடுகிற அல்லது திருட்டுப் போய்விடுகிற சாமான்களுக்கு நஷ்டஈடாக, இரயில்வேக்கள், ஆண்டுதோறும் ரூ. 3 கோடி வரை கொடுக்கவேண்டியிருக்கிறது"

என்று, உதவி இரயில்வே மந்திரி ஷாநவாஸ்கான் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

அறிவை வளர்க்கும் பணியிலுள்ள ஆசிரியர்களின் அவல நிலை!

சட்டசபையில் ப. உ. சண்முகம் விளக்கம்

சென்னை, ஜூலை 17—

சென்னை சட்டசபையில் கல்வி மானியத்தின் மீது கொண்டு வரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில், கழக உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் ஓராசிரியர்களின் குறைகளை எடுத்துரைத்தும், தமிழ் ஆசிரியர்களை அவமதிக்கும் அரசாங்கத்தின் போக்கை அம்பலப்படுத்தியும் பேசினார்; அவரது பேச்சின் முக்கிய கருத்து இங்கு தரப்படுகிறது :—

"படித்தும் வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை கிடைத்த நம் நோக்கத்துடன் ஓராசிரியர் பள்ளிகள் துவக்கப்பட்டன; அவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றி அனுபவம் பெற்ற பின்னர், இப்போது அவர்கள் மீண்டும் பயிற்சி பெறவேண்டும் என்று கூறப்படுகிறது. அதுவும் இரண்டாண்டு காலம் பயிற்சி பெறவேண்டுமெனக் கூறப்படுகிறது; அதற்கு மாறாக, ஆறு மாதகாலம் பயிற்சி பெற்றால் போதும் என்று விதி ஏற்படுத்தவேண்டும்.

"அறிவை வளர்க்கும் பணியிலுள்ள ஆசிரியர்கள் இன்று மோசமான நிலையில் உள்ளனர்; அவர்களுடைய வாழ்க்கை நிலை உயரவேண்டும்.

"ஆரம்பப்பள்ளியிலிருந்து மாணவர்கள் தேர்வு பெற்று உயர்நிலை கல்விக்காகச் செல்லும்போது ஒரு தேர்வு நடத்தப்படுகிறது; இது அவசியமில்லை. இந்த ஏற்பாட்டை மாற்றவேண்டும்.

"தமிழ் ஆசிரியர்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. அவர்களுக்குக் குறைந்த ஊதியம் தரப்படுகிறது. அவர்களின் குடும்பங்கள் திண்டாடுகின்றன. தாய் மொழியைப் போற்றிக் காப்பதாகப் பெருமை பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை; அவற்றைச் செயலில் செய்து காட்ட முன்வரவேண்டும்.

"தமிழ் ஆசிரியர் பயிற்சிக்குப் போகும்போதும், இந்தி ஆசிரியர் பயிற்சிக்குப் போகும்போதும், இருசாராருக்கும் தரப்படும் மானியத்தில் வித்தியாசம் காணப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டும். இந்த வித்தியாசத்தை ஒழிக்கவேண்டும்."

சென்னை சர்க்காரின் சுறுசுறுப்பு!

சென்னை, ஜூலை 19—

சீர்காழி தாலுகாவில் கொட்டயமேடு கிராமத்தில் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று 1953-லிருந்து ஆராயப்பட்டு வருகிறதாம். இதற்கு ரூ. 2 இலட்சம் செலவிடப்படுமாம். சுமார் 215 ஏக்கர் நிலம் விவசாயத்திற்குக் கொண்டு வரப்படுமாம்.

க. அன்பழகன் :—"இம்மாதிரி சிறு திட்டங்களை நீண்டகாலமாக ஆராயப்பட்டு தாமதப் படுத்தப்படுவதேன்?"

அமைச்சர் :—நிபுணர்களின் முடிவுகள் கிடைப்பதில் தாமதமேற்படுவதுதான் இதற்குக் காரணமாகும்.

எம். பி. சுப்பிரமணியம் :—"சுமார் ஒரு ஏக்கர் நிலத்தை ரூ. 1,000 செலவில் சாகுபடிக்கு ஏற்றதாக்க முடியுமானால் அதே போன்று மற்ற இடங்களிலும் அத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?"

அமைச்சர் :—'எல்லா இடங்களிலும் அம்மாதிரி செய்ய இயலாது."

★

சென்னை சர்க்கார் திண்டாட்டம்?

சென்னை, ஜூலை 19—

"இதுவரையில் கிராமதானமாகக் கிடைத்துள்ள எத்தனை கிராமங்களில் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது?"

என்று தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் சட்டசபையில் இன்று ஒரு கேள்வி எழுப்பினர்.

அமைச்சர் :—"இன்னும் அத்தகைய திட்டம் அமுலாக்கப்படவில்லை."

★

சென்னை மாநிலத்தில் அரிசி நிலைமை!

சென்னை, ஜூலை 19—

1957—58-ம் ஆண்டிற்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளதாம்; விலை உயர்வைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாம் !

ஏ. கோவிந்தசாமி :— "விலை உயர்வை தடுக்க அரசாங்கம் என்ன செய்துள்ளது என்று கூறமுடியுமா ?"

அமைச்சர் :— "ஏற்றுமதியை நிறுத்தி 'நஷ்டத்தையும் கருதாமல் நியாய விலைக் கடைகளில் அரிசி வழங்கப்படுகிறது"

க. அன்பழகன் :—"நியாய விலைக் கடைகள் பொதுமக்கள் நலனைக் கருதி செய்யப்பட்ட ஏற்பாடு என்று அமைச்சர் கூறியுள்ளார்; எங்கெங்கு நியாய விலைக் கடைகள் அவசியம் என்று மக்கள் கருதுகின்றனரோ அங்கு அவற்றைத் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?"

அமைச்சர் :—"மேலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டியதின் அவசியத்தை அரசாங்கம் உணர்கிறது."

பீடி தொழிலாளர்கள்

க. அன்பழகன் கேள்வி :

சென்னை, ஜூலை 17—

சுருட்டுத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கென ஊதிய போர்டு நியமிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்குக் கிடையாது என்று தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் சட்டசபையில் அறிவித்தார்.

க. அன்பழகன் :—பீடித் தொழிலாளர்கள் முதலாளிகளால் சுரண்டப் படுகின்றனர் என்று பேசப்படுவதால், அவர்கள் குறைகளை 'அட்ஜூடிகேஷன்' 'கன்சிலியேஷன்' மூலம் தீர்க்கவும், நியாயமான கூலியை நிர்ணயிக்கவும் அரசாங்கம் முன்வருமா ?"

அமைச்சர் :—இப்போது இல்லை.

நஷ்டத்தை ஈடுசெய்ய கட்டண உயர்வாம்!

சர்க்கார் பஸ்களில் இனி புதிய காசுகளே அமுலாகுமாம்

ஆகஸ்டு திங்கள் முதல் நாளிலிருந்து சென்னை சர்க்கார் பஸ்களின் கட்டணங்கள் உயருகின்றன; அதாவது ஒரு அணாவுக்கு 7 புதிய காசுகளும், ஒன்றரை அணாவுக்கு 10 புதிய காசுகளும், இரண்டணாவுக்கு 13 புதிய காசுகளும் கட்டணமாக வாங்குவார்கள்.

இனிமேல் அணா கணக்கு கிடையாதாம். அப்படி அணாக்கள் கொடுத்தாலும் புதிய காசுகளின் கணக்கில்தான் கட்டணம் வசூலிப்பார்களாம். அரசாங்கப் போக்குவரத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்யவே இக்கட்டண உயர்வாம்.

அதிகாரத்தின் பெயரால் அவமதிப்பு!

விழுப்புரம், ஜூலை 6—

விழுப்புரம் ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டம் திரு. சந்தானம் அவர்களின் ஒருநிமிட தலைமைக் குப்பின் இந்நகர் வட்ட ஆய்வர் அவர்கள் பார்வையில் நடைபெற்றது.

வித்வான் முனிசாமி அவர்களின் திருக்குறள் விளக்கத்திற்குப் பின், தலைவர் தனது முடிவுரையில், '8-ம் வகுப்பு படித்து ஆசிரியர் பணிபுரிபவர்கள், மாணவர்களின் தரத்தையே குறைப்பவர்கள்,' என்று கூறியது ஆசிரியர்கள் மனதை பாதித்துப் பெரிதும் வருத்தத்தை உண்டாக்கியுள்ளது. (ந—கி)

பஞ்சாயத்து நிறுவன தேர்தல்

சென்னை, ஜூலை 19—

பஞ்சாயத்து நிறுவனங்கள் அமைப்பு முறையிலும், தேர்தல் முறையிலும் சில மாற்றங்கள் செய்வது பற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருவதாக அமைச்சர் சட்டசபையில் தெரிவித்தார்.

எப்படியும், தேர்தல்களை 1958 ஜனவரி முதல் செப்டம்பர் திங்களுக்குள் நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக நிதி அமைச்சர் அறிவித்தார்.

எஸ். எம். அண்ணாமலை :—"பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ? அல்லது உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?"

அமைச்சர் :— "அரசாங்கம் அதுபற்றி யோசித்துவருகிறது."

எம். பி. சுப்பிரமணியம் :—"தீவிர ஆலோசனை செய்ய என்ன இருக்கிறது ?"

அமைச்சர் :—"அமைப்பு முறையில் சில மாற்றங்களைப் பற்றி ஆராயப்படுகிறது.

க. அன்பழகன் :— "இப்படித் தேர்தலை நடத்தாமல் தாமதப் படுத்துவது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதையும் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்ததாகும் என்பதையும் அரசாங்கம் உணருகிறதா?"

அமைச்சர் :— "அதை உணர்ந்துதான், இப்போது அது பற்றி தீவிரமாக ஆராயப்படுகிறது."

அச்சகத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்

க. அன்பழகன் கேள்வி : அமைச்சர் தரும் பதில்

சென்னை, ஜூலை 17—

அச்சகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் ஊதிய நிலை பற்றி சென்னை சட்டசபையில், கழக உறுப்பினர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டுக் கேள்வி ஒன்று எழுப்பினர்.

க. அன்பழகன் :—"அச்சகங்களில் பணியாற்றுபவர்கள் ஓரளவு கல்வி பயின்றவர்களாக இருப்பதாலும், அநேகமாக இரவு நேரங்களில்கூட அவர்கள் பணியாற்ற வேண்டியிருப்பதாலும், அடிக்கடி இடம் பாற வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

அமைச்சர் :— "அச்சகங்களில் பணியாற்றுபவர்களின் நலனுக்குக் கூலி நிர்ணய நிறுவனம் ஏற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாது; முதலாளிகளே நியாயமான கூலியை அவர்களுக்குத் தருவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது; இத்துறையில் அவசியம் ஏற்பட்டால் அரசாங்கம் தலையிடும்"

அசாமில் எண்ணெய்த் தொழிற்சாலை

டெல்லியின் பிடிவாதத்தை தகர்க்க அடுத்த நடவடிக்கை என்ன

பிரதேச காங்கிரஸ் கூடுகிறது

கௌஹாத்தி, ஜூலை 16—

அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை இல்லை என்ற முடிவினை, அண்மையில் மத்திய இயற்கைவள மந்திரி கே. டி. மாளவியா மக்கள் சபையில் தெரிவித்திருப்பதானது, ஏற்கனவே மந்திரி ஆசாத் தந்த உறுதிமொழிக்கு விரோதமாயிருப்பதாக அசாம் பிரதேச காங்கிரஸ் தலைவர் பீமல் பிரசாத் சாலிஹா குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்று நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

டெல்லி சென்ற தூதுக் குழுவிடம் மௌலானா ஆசாத் 'அசாமின் கோரிக்கையை சர்க்கார் அனுதாபத்துடன் கவனிக்கும்—பீகாரில் தொழிற்சாலையை நிறுவுவது என்று எடுக்கப்பட்டுள்ள தற்காலிக முடிவு மீண்டும் பரிசீலிக்கப்படும்; ஜூலையில் மாநாடு கூட்டி, உங்களையும் அழைத்து இதுகுறித்துப் பேசுவோம், என்று கூறியதற்கு மாறாக, அமைச்சர் மாளவியா மக்கள் சபையில், 'அசாமில் தொழிற்சாலை கிடையாது' என்று அறிவித்திருக்கிறார் என்றும் காங்கிரஸ் தலைவர் கோபப்பட்டிருக்கிறார் !

★

எண்ணெய் தூதுக்குழுவுடன் பேச நேரு சம்மதம்

கௌஹாத்தி, ஜூலை 18—

அசாம் மாநிலத்தில் எண்ணெய்த் தொழிற்சாலை நிறுவுவது பற்றிய பிரச்சினை குறித்து அசாம் தூதுக்குழு ஒன்றிடம் பேசுவதற்கு பண்டித நேரு ஒப்பியிருக்கிறாராம் !

மாநில முதன் மந்திரியுடன், பிரதேச காங்கிரஸ் தலைவரும் வரலாம் என்று நேரு தெரிவித்துள்ளாராம் !

கிருத்துவர்களான தாழ்த்தப்பட்டவர்கள்

இதரரைப் போலவே கல்விச் சலுகை பெறுவர்

சென்னை, ஜூலை 18—

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், கிருத்தவ மதத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கல்வி சலுகை அளிப்பதில் காட்டப்பட்டுவந்த வேறுபாட்டினை, நீக்குவது என்று சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்.

அதன்படி, இப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படும் எல்லாக் கல்விச் சலுகைகளும் கிருத்துவர்களாக மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தரப்படும் என்று உத்தரவிட்டிருக்கின்றனர்; இந்த உத்தரவு 1957—58-ம் ஆண்டு முதலே நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் 245 ஐ. சி. எஸ். அதிகாரிகள் உள்ளனராம் !

புதுடில்லி, ஜூலை 18—

1957 மே 30-ந் தேதி கணக்குப்படி 245 ஐ. சி. எஸ். அதிகாரிகள் இந்தியாவில் உள்ளனர் என்றும், இவர்களில் 118 பேர் டெல்லி சர்க்காரிலும், 127 பேர் மாநில சர்க்கார்களிலும் வேலை செய்வதாகவும் மந்திரி தந்தார், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திர காங்கிரசில் கோஷ்டிச் சண்டை

பி. கோபால ரெட்டி பதவியிலிருந்து விலகுவார்?

ஆந்திர காங்கிரசில் கோஷ்டிச் சண்டை இப்போது மீண்டும் தலைதூக்கியிருக்கிறது.

தெலிங்கானா இணைந்த புதிய ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் காங்கிரஸ் தலைவராக சஞ்சீவி ரெட்டி கோஷ்டியினரில் ஒருவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார் என்றும், இது சஞ்சீவி ரெட்டிக்குக் கிடைத்துள்ள மற்றொரு வெற்றி என்றும் கூறப்படுகிறது.

வரவு—செலவுத் திட்டத்தில், மந்திரி சபையினிடத்தில் ஒற்றுமை இருக்க வில்லை என்றும், நிதி மந்திரி கோபால ரெட்டிக்கும், முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டிக்கும் தகராறு வளர்ந்துவிட்டது என்றும் இதனால், கோபால ரெட்டி விலகிக் கொள்ளக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

கேரளக் காங்கிரசார் போக்கு !

புதுடில்லி, ஜூலை 16—

கேரளத்தின் தலைநகரை திருவனந்தபுரத்திலிருந்து மாற்ற வேண்டும் என்று சில கேரள காங்கிரசார் கோரி வருவதற்கு, மேலிடத்தில் ஆதரவு கிடைக்காது என்று கூறப்படுகிறது.

மேலிடத்தின் கருத்தை அறியாமலேயே இந்தக் கிளர்ச்சி துவக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வரதட்சணை ஒழிவது பெரும்பேறு!

புதுடில்லி, ஜூலை 17—

"இந்த நாட்டு மக்கள் மண விழாக்களுக்கும், இறுதிச் சடங்குகளுக்கும் நிறைய பணத்தைச் செலவிடுகின்றனர் ; முன்னாள் 'சம்பிரதாயம்' என்பதற்காக அதிகமாக செலவழிப்பது கட்டுப்படியாகாது ; இச்செலவுகளை குறைக்க வேண்டும்."

என்று, இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் மக்கள்சபையில், செலவு வரி மசோதா விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது குறிப்பிட்டார்.

திருமணங்கள், இறுதிச் சடங்குகள், வரதட்சணை ஆகியவைகளுக்கு வரியிலிருந்து விலக்களிக்கக் கோரியதை நிராகரித்து, 'இவ்வரி, வரதட்சணை முறையை ஒழிக்க உதவினால் அது கிடைக்கப்பெறாத பெரும் பேறாக இருக்கும்' என்றும் அவர் கூறினர்.

குழந்தை இறந்ததேன் ?

அரசாங்கத்தின் கடமை என்ன ?

சென்னை, ஜூலை 18—

உதகையிலுள்ள மருத்துவ விடுதியில் ஒரு குழந்தையை நாய் தூக்கிச் சென்று விட்டது உண்மை என்றும், விசாரணைக்கும் பிறகு விடுதியைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் சட்டசபையில் அமைச்சர் தெரிவித்தார்.

க. அன்பழகன் :— "உணவைத் தேடி பூனையும், நோயாளியைத் தேடி நாயும் ஆக இப்படி விலங்குகள் உள்ளே வருவதை பற்றி எச்சரிக்கை செய்ய அரசாங்கம் முன்வருமா ?"

அமைச்சர் :— "இப்போது தக்க பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது"

ஏ. கோவிந்தசாமி :—"குழந்தை இறந்ததற்கும், சுத்தப்படுத்தும் தொழிலாளிக்கும் என்ன தொடர்பு?"

அமைச்சர் :— "குழந்தை உயிரோடிருக்கும்போது மட்டும்தான் 'நர்ஸ்'கள் பொறுப்பாளிகளாவர்."

மு. கருணாநிதி விளக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கல்லூரிக் துறைக்கு ரூ. 5·96 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். 1956—57ல் ரூ. 7 இலட்சம் விவசாயக் கல்லூரிக்கு ஒதுக்கிவிட்டு, இப்போது ஐந்து இலட்சத்து சொச்சம் ரூபாய் ஒதுக்குவதாக இருந்தால் அதைக்கண்டு நாம் பூரிப்பு அடையக்கூடிய நிலையில் இல்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"முந்திரித் தொழிலைப் பற்றி நான் சிறிது கூற விரும்புகிறேன்—அடிக்கடி நான் முந்திரித் தொழிலைப் பற்றி குறிப்பிடுகிறேன் என்று நினைக்கவேண்டாம்—முந்திரித் தொழில் சம்பந்தமாக இங்கே ஒன்றை எடுத்துக்காட்டாமல் இருக்கமுடியாது நல்ல காரியத்திற்காகவே நெய்வேலிப் பகுதியில் பல முந்திரிக் காடுகள் அழிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. அரசினர் முந்திரிக் காடுகளை உற்பத்தி செய்வதற்கும், முந்திரி பயிரிடுவதற்கும் புதிய புதிய இடங்களைத் தேடி அலையாமல், நெய்வேலியில் முந்திரிக் காடுகள் அழிக்கப்படுவதால் பாதிக்கப்படுகிறவர்களிடம் நஷ்டஈடு கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு அவர்களே இடத்தை வாங்கிப் பயிரிடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனஸ்பதி ஆலை

"கடந்த மாதத்தில் நான் விழுப்புரம் சென்றிருந்தேன்; அப்போது புகைவண்டி நிலையத்திற்குப் பக்கத்தில் ஒரு புதிய ஆலை இருப்பதைப் பார்த்தேன். அது என்ன என்று கேட்டதற்கு. மணிலாக்கொட்டையிலிருந்து 'வனஸ்பதி'யைத் தயாரிக்கக் கூடிய ஆலை என்று கூறினார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கத்திடமிருந்து ரூ. 10 இலட்சம் கடன் வாங்கி வனஸ்பதி உற்பத்தி செய்வதற்கு என்ற ஆலையை அமைத்தார்கள் என்றும், அப்படிக் கடனைப் பெற்ற ஆலையைக் கட்டினார்கள் என்றும். கட்டிடங்களைக் கட்டிவிட்டு இயந்திரங்களை வரவழைத்து அவைகளையும் அங்கு அமைத்தார்கள் என்றும், அதன் பிறகு அந்த ஆலை வேலை செய்யவில்லை என்றும் சொன்னார்கள்.

"கட்டிடங்கள் கட்டி இயந்திரங்கள் அமைத்தும் ஆலை வேலை செய்யவில்லை என்பதோடு, 'வேதாளம் சேருமே; வெள்ளெருக்குப் பூக்குமே; பாதாள மூலி படருமே!' என்ற பழைய பாடல் ஒன்றை ஞாபகமூட்டுவதாகவும் இருக்கிறது அந்த இடம்! கட்டிடம் சீரழிந்து சிறப்பழிந்து, இயந்திரங்கள் துருபபிடித்துப்போன நிலையில் காணப்படுகின்றன. இதை உடனடியாகக் கவனித்து அந்த 'வனஸ்பதி' ஆலைக்கு மீண்டும் புத்துயிர் அளித்து, அதனால் அங்கு விளையும் மணிலாக் கொட்டை அங்குள்ளவர்களுக்கு உள்ளபடியே பயனளிக்கக்கூடிய நிலையை உண்டாக்கி, அதன் மூலம் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களைப் பயனடையச் செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி முத்து

"நேற்றையதினம் அமைச்சர் அவர்களுடைய உரையில், வேறு ஒரு உரையிலும் காணப்படாத ஒரு நல்ல செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியில் ஆண்டுதோறும் முத்துக்குளித்தல் நடைபெறுமென்றும், அதனால் அரசாங்கம் கணிசமான வருமானத்தைப் பெறலாம் என்றும அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு—கனம் சபாநாயகர் வாயிலாக — ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1524-ம் ஆண்டில் போர்த்துகீசியர் இந்த நாட்டிலே வந்த காலத்திலே கன்னியாகுமரியில் முத்தெடுக்கும் தொழில் மிகமிகச் சிறப்பாக நடைபெற்றது என்றும், அதன் பிறகு பிரிட்டிஷார் ஆதிக்கத்தின் கீழ் இந்த நாடு வந்தபிறகு மதுரை நாயக்கர்களும், இராமநாதபுரம் அரசர்களும், எட்டையபுரம் இராசாக்களும் அந்த தொழிலை அங்குள்ள மீனவர்களைக்கொண்டு சிறப்புற நடத்தினார்கள் என்றும் சரித்திரத்தில் பார்க்கிறோம்.

"இன்றையத் தினம்கூட கன்னியாகுமரி முனையிலிருந்து, இராமேசுவரம் வரையுள்ள கடற்பரப்பில் நல்ல முத்துச் சிப்பிகள் விளையும் பாறைகள் ஏராளமாக இருக்கின்றன என்றும், பரிசிலனை நடத்தினால் நல்ல முத்துக்களைப் பெறலாம் என்றும் அந்த மாவட்டத்திலுள்ள பெரும்பாலோர் கூறுகிறார்கள். அதையும் கவனித்தால், கிரேக்கம், யவனம் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழகத்தின் பெருமையை எப்படி முத்துக்கள் அன்றொரு நாள் உயர்த்தினவோ, அதேபோல இன்றும் தமிழகத்தின் பெருமையை வெளிநாடுகளில் உயர்த்துவதற்கு அவைகள் பயன்படும் என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நங்கவரம் நிலை

"விவசாயத்திற்கு மிகமிக முக்கியமானவை விதை, இராசாயன எரு என்பதோடு மாத்திரமல்ல—நீர்ப்பாசனம் என்பதோடு மாத்திரமல்ல — விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளும் முக்கியமானவர்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறேன்.

"விவசாயிகள் வளத்தோடு வாழ்ந்தால் தான்—அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட்டு களிப்பு ஏற்பட்டால் தான் விவசாயம் நல்ல முறையில் நாட்டில் பெருக முடியும் என்பதையும் விவசாய அமைச்சர் அவர்கள் உணராதவர் அல்ல!

"ஆனால் குறிப்பாக, என்னுடைய குளித்தலைத் தொகுதியைப்பற்றி ஒன்றுகூற விரும்புகின்றேன். அங்கே இருக்கும் நங்கவரம் பகுதியில் விவசாயத் தொழிலாளர்கள் 'முச்சலிகா' என்ற அடிமை முறிச்சீட்டுக்கு ஆட்பட்டு, அந்த அடிமை முறிச்சீட்டை 10, 15 ஆண்டுகளுக்கு முன் அம்மாதிரி எழுதிக் கொடுத்திருந்த காரணத்தால் இன்றையத் தினம் அவர்கள் கூலிகளாகக் கருதப்பட்டு, 'சாகுபடியாளர், விவசாயி', என்ற பட்டியலிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

'இன்றைக்கு நியாயவாரச் சட்டத்தின் விளைவைத் துர்விநியோகப்படுத்துகிற வாக்குவன்மைபடைத்த வழக்கறிஞர்களும், மற்றவர்களும், மிராசுதார்களும், அந்த விவசாயிகளுடைய நிலைமையை மிகமிகத் தாழ்த்திவிட்டக்காரணத்தால், 'ரெண்ட் கோர்ட்'டிலும், வேறு கோர்ட்டுகளிலும் நடைபெறும் வழக்குகள் 300-க்கு மேல் ஏற்பட்டுவிட்டன.

"அந்த இருக்கும் மிராசுதார்கள் விவசாயிகளுக்குச் சொல்லிவிட்டார்கள்—'நடைபெறும் 300 வழக்குகளும் விசாரிக்கப்பட்டு முடிவு கூறிய பிறகுதான் நீங்கள் எல்லாம் எங்கள் நிலத்தில் இறங்கவேண்டும்; அதுவரை கூலி-அடிமை முறையில் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் இறங்க வேண்டும்',—என்று! அதன் காரணமாக இன்றையத் தினம் விவசாயிகள் நிலத்திலே இறங்குவதற்கு அஞ்சி இருக்கிறார்கள்—நிலத்திலே இறங்கினால் கைது செய்யப்படுவோம் என்ற பீதியுடன்!

"மூன்று நாட்களுக்கு முன்பு — அதாவது, சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். குளித்தலையில் நிகழ்ந்த விவசாயிகள் கோரிக்கை தினத்தன்று காலையில் 8 விவசாயிகள் போலிசாரால் கைது செய்யப்பட்டார்கள். அந்த அளவுக்கு நிலத்திலே இறங்கின விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"இதே நிலைமை நீடிக்குமானால் 8 ஆயிரம். 9 ஆயிரம் ஏக்கரா நிலத்தில் சாகுபடி நின்றுவிடக் கூடிய நிலைமையும், விவசாயம் ஒழுங்காக நடைபெற முடியாத நிலைமையும் குளித்தலைத் தொகுதியில் நங்கவரம் பகுதியில் ஏற்படும் என்றும், கழனிகள் களங்களாகும் என்றும கூறி, இத்தகைய விவசாயிகளுடைய நிலைமை பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கு உடனடியாக உதவி செய்தோமானால், விவசாயம் செழிப்படையச் செய்தவர்களாகவும், விவசாயிகளுடைய தேவையை நாம் உணர்ந்தவர்களாகவும் ஆவோம் என்று எடுத்துரைக்க விரும்புகிறேன்"

கழகக் கூட்டங்கள்

★

மேட்டூர் அணை :

போதுசன சேவா சங்க திடலில் 22—7—57 மாலை 6½ மணிக்கு நகர தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர் : முத்துசாமி

பேசுவோர் :

என். எஸ். இளங்கோ

அ. பாலு

க. கு. சின்னசாமி

★

உடையார்பாளையம்—கரையெட்டிபறதூர் :

அழகிரி திடலில் 23—7—57 மாலை 6 மணிக்கு தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர் : க. சுப்பிரமணியன்

பேசுவோர் :

அன்பில்-தருமலிங்கம்

எம். எஸ். மணி

சா. இராமசாமி

ஏ. என். கோவிந்தராசு

★

சேலம்-அம்மாப்பேட்டை:

23-வது வட்டம் செல்வம் சதுக்கம்

21—7—57 மாலை 6½ மணிக்கு

தலைவர் : எம் ஆர். சாமி

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

இ. ஆர். கிருஷ்ணன்

சிற்றளி-சுப்பிரமணியம்

கே. பி. நஞ்சப்பன்

கே. எஸ். மணி

★

நெல்லை-நாங்குநேரி :

அம்மன்கோவில் முன்பு 23—7—57 இரவு 8 மணிக்கு

தலைவர் : தாமரைசெல்வன்

பேசுவோர் :

என். வி. நடராசன்

டபிள்யூ. டி. துரைசாமி

கோவையில் மும்முனைப்போராட்ட நினைவு நாள் விழா

21—7—57 மாலை 6-மணிக்கு. கோவை-காட்டூர் தி. மு. கழகத்தின் சார்பில், காட்டூர் தி. மு. க படிப்பகத்தினருகில், தோழர் என். கே. சாமி தலைமையில் மேற்படி விழா நடைபெறும்; தோழர்கள் இளம்வழுதி, க. கோபால், சி. தேவராசு, ப. பழனிசாமி மற்றும் பலர் பேசுவர்.

ஸ்ரீ லலித கலா மன்றம் (Regd) சென்னை-1.

21—7—57 ஞாயிறு மாலை 6-15 மணிக்கு

இராஜா அண்ணாமலை மன்றத்தில்

★

அண்ணா அவர்கள் தலைமையில்

இண்டியன் நேஷனல் ஆர்டிஸ்ட்ஸ் அளிக்கும்

'எங்கிருந்தோ வந்தாள்'

(தமிழ் நாடகம்)

கட்டணம்: ரிசர்வ் ரூ. 5, 3. அன் ரிசர்வ் ரூ. 2, 1.

நாளை காலை 9-மணியிலிருந்து ஹாலில் டிக்கட்டு விற்கப்படும்

சென்னை மாணவர் மன்ற வெள்ளி விழா!

2-ம் நாள் நிகழ்ச்சியில் அண்ணா கலந்து கொள்வார்

சென்னை மாணவர் மன்ற வெள்ளி விழாவின் 2-வது நாள் நிகழ்ச்சி 21—7—57 ஞாயிறன்று காலை 10-மணிக்கு, வண்ணை—தியாகராயர் கல்லூரியில் அமைக்கப்பெற்றுள்ள மணியாசர் பந்தலில், துணை மேயர் கே. இராமதாசு அவர்களால் எழைகட்கு உணவு வழங்குதலோடு துவங்கும்.

பிற்பகல் 4-மணிக்கு திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் மீண்டும் துவங்கும் விழா நிகழ்ச்சியில் அண்ணா அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்.

நிகழ்ச்சிகளின் விவரம்:—பேராசிரியர் மயிலை சிவமுந்து அவர்களின் வரவேற்புரை: தலைவர் உரை; சென்னை நகராண்மைக் கழகத் துணை ஆணையாளர் என் சங்கரன் அவர்களின் 'வெள்ளி விழா மலர்' வெளியீடு உரை; நாவலர் டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்களால் அறிஞர்கட்கு பட்டம் வழங்குதல் ; திரு அழ. வள்ளியப்பா அவர்களால் டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் படத்திறப்பு ; திருவாளர்கள் டாக்டர் இரா.பி. சேது (பிள்ளை), டாக்டர் மு.வரதராசன், எம். ஆர். பெருமாள் (முதலியார்) ஆகியோரின் மாணவர்கு அறிவுரை; மன்ற அமைச்சரின் நன்றி கூறல் ; இரவு 7-30 மணிக்கு நதம்ப நிகழ்ச்சி.

சென்னை—மயிலை அறிவு வளர்ச்சி மன்றம்

21—7—57 காலை 9 மணிக்கு. மயிலை — மன்றப் பணிமனையில் தோழர் ம. கிருட்டிணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் கோ. இளவரசு, பொன். கு. கோதண்டபாணி எம். நாகப்பன் மற்றும் பலர் பேசுவர். தோழர் பி. இராமசாமி மன்றத்தில் கொடி யேற்றுவார்.

மறைவு

இரங்கூனில் அறநெறி வழுவாப் பெருநெறி வாழ்ந்த காலஞ்சென்ற புதுவை துரைசாமி முதலியார் அவர்களின் மனைவியாரும், புலவர் பு. செல்வராசன், வித்துவான் கண்ணம்மாள் முதலியோரின் அன்னையாரும், டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் மாமியுமாகிய உயர்திரு ஜெயலட்சுமி அம்மையார் தம் 70-வது வயதில் 18—7—57 11மணிக்கு தம் மக்கள், மருமக்கள், பேரர்கள், பேர்த்திகள் சூழவிருந்த நிலையில் தம் இன்னுயிர் நீத்தார்.

நண்பர்கள் பு. செல்வராஜ் அவர்களுக்கும், டாக்டர் இராசமாணிக்கனார் அவர்களுக்கும், நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ஆ-ர்)

உடையார்பட்டிக்கு துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் வருகை

22—7—57 திங்களன்று மாலை 6-30 மணிக்கு. நெல்லை—உடையார்பட்டி பாண்டியன் திடலில், உடையார்பட்டி அழகிரி நினைவு மன்றத்தின் சார்பில் வழக்கறிஞர் டி. செவந்தி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்; துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், மாவட்டச் செயலாளர் டி. ஆர் சுப்பிரமணியம், மாவட்டத் துணைச் செயலாளர் டபிள்யூ டி. துரைசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். மாலை 5-30 மணிக்கு என். வி. நடராசன் அவர்கள் கொடி ஏற்றி வைப்பார்.

உதயசூரியன் படிப்பகப் பொதுக்கூட்டம்

21—7—57 மாலை 6 மணிக்கு சென்னை—மயிலை 'லஸ்' அருகிலுள்ள இராமகிருஷ்ணபுரத்தில், மேற்படி படிப்பகத்தின் ஆதரவில் தோழர் அ. சி நெடுமாறன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர் மு. கருணாநிதி அவர்களும், தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., பி. இராமசாமி ஆகியோரும் சொற்பொழியாற்றுவர்.

பல்லடம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

21-7-57 பிற்பகல் 4-மணிக்கு, பல்லடம் கே. ஆர். எம். கே. எம். குமரப்ப செட்டியார் மண்டியில் மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

இளநாங்கூர் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு,

22—7—57 இரவு 8 மணிக்கு, மேற்படி செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

பொதுத் தேர்தல்கள்

கேரள சர்க்கார் செலவிட்ட தொகை பற்றி தகவல்

திருவனந்தபுரம், ஜூலை 19—கேரளத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்காக இதுவரை சர்க்கார் ரூ. 12 90,000 செலவு செய்திருக்கிறது என்றும், கணக்குகள் இன்னும் முடியவில்லை என்றும், இன்னும் ரூ. 3 இலட்சம் வரை செலவாகக்கூடும் என்றும், இதில் பாதியை டெல்லி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்றும் கேரள சட்ட மந்திரி வி. ஆர். கிருஷ்ண அய்யர், சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.